**KUMARI ARIVIAL PERAVAI**
www.kaponline.net
Mullanchery
Mulamkuzhi PO 629162
Kanyakumari District.
mullanchery@gmail.com
velaianmuthaian@yahoo.co.in


---

## மார்ச் 26 ஆம் தேதி
## இரவு 8.30 மணிமுதல் 9.30 மணிவரை ஒரு மணி நேரம்
## மின்விளக்குகள் அணைத்து பூமி வெப்பமடைதல் விழிப்புணர்வு
## கடைபிடிக்க குமரி அறிவியல் பேரவை வேண்டுகோள்
## இளம் விஞ்ஞானிகள் மெழுகுவர்த்தி தீபமேந்தி விழிப்புணர்வு

நாம் வாழும் பூமியில் 10 கிலோமீட்டர் அளவில் இருக்கும் வளிமண்டலத்தில் சுவாசிக்கும் காற்று, மழைபொழியும் நீராவி மேகம் எல்லாம் இருக்கின்றன. இதில் 99 பங்கு, நமக்கு உயிர் கொடுக்கும் ஆக்சிஜன் நைட்ரஜன் போன்ற வாயுக்கள் இருக்கின்றன. மீதியிருக்கும் ஒரு பங்கில் கரியமிலவாயு, மீதேன், நைட்ரஸ்ஆக்சைடு இன்னும் பல வாயுக்களை உள்ளடக்கியதை பசுங்குடில் வாயுக்கள் என அழைக்கிறார்கள். இவைகள் மனித இனத்தையும் தாவரங்களையும் விலங்குகளையும் உயிரிகளையும் பாதுகாத்து வருகின்றன. பல லட்சம் வருடங்களாக சீராக இருந்த பசுங்குடில் வாயுக்கள் 200 வருடத்துக்கு பின்பு ஆரம்பித்த தொழில் புரட்சியினால் வெளியேற்றப்படும் கார்பனால் கனமாகிப்போய் பூமியின் வெப்பம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

200 வருடங்களுக்கு முன்னால், நம் வளிமண்டலத்தில் இருந்த கரியமிலவாயுவின் அளவு 280 பி.பி.எம் அதாவது பத்து லட்சத்தில் 280 பங்கு. இன்று இது 390 பி.பி.எம் மை தொட்டுக்கொண்டிருக்கிறதாம். ஒவ்வொரு வருடமும் 3 பி.பி.எம் ஏறி வருவதாக ஆய்வு செய்திருக்கிறார்கள். இந்த நூற்றாண்டுக்குள் 800 பி.பி.எம் ஐ தாண்டி விடும் என்றும் விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள்.இதற்கு எல்லாம் என்ன காரணம் அன்றாடம் நம் வாழ்க்கையோடு ஒட்டிக்கொண்டிருக்கும் எரிசக்திதான்.

தொழிற்சாலைகள், ரயில் வண்டிகள், வாகனங்கள், மின்விசிறி, குளிர்சாதனப்பெட்டிகள், டெலிவிசன்கள் நம்மோடு ஒட்டிவிட்ட அத்தியாவிசயப்பொருட்கள் எல்லாம் நிலக்கரி, பெட்ரோல் போன்ற எரிசக்தியின் பயன்பாடுகளால் இயங்கி வருகின்றன. இதையெல்லாம் தவிர்த்துவிட்டு திரும்பவும் நாம் மாட்டுவண்டியிலும் குதிரைவண்டியிலும் போகவும் முடியாது. ஆனால் நவீன பயன்பாடுகளைக் கட்டுப்படுத்தி இயற்கையோடு இயைந்து வாழவும் முடியும்.

மரங்கள் நடுதலும், நீர்நிலைகளைப் பாதுகாப்பதும், கழிவு மேலாண்மை கடைபிடித்தலும் இயற்கையோடு இயைந்து வாழ்தலின் ஒரு பகுதியாகும்.

எரிசக்தியை முறையாகப் பயன்படுத்துவதும் மாசுஇல்லாத எரிசக்தி பயன்படுத்துவதும் அதற்கான கண்டுபிடிப்புகளும் காலத்தின் கட்டாயமாகி வருகிறது. பூமி வெப்பமடைவதிலிருந்து பாதுகாக்கும் விழிப்புணர்வில் எரிசக்தியைக் முறையாகப் பயன்படுத்துவது ஒரு விழிப்புணர்வாகும். பல்வேறு முறைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஆர்வலர்கள் உலகம் தழுவிய ஒருவிழிப்புணர்வு முறையை வெளியிட்டிருக்கிறார்கள்.

மார்ச் 26 ஆம் நாள் இரவு 8.30 மணிமுதல் 9.30 மணிவரை வீடுகள், தொழில் நிறுவனங்கள் அனைத்திலும் ஒருமணிநேரம் மின்விளக்குகளை அணைத்து பூமி ஒருமணிநேரம் (Earth hour) என்ற விழிப்புணர்வைக் கடைபிடிக்க கேட்டுள்ளார்கள். நாமும் அந்தப்பணியில் ஈடுபட்டு உயிர்க்கோளத்தின் வாழ்வுக்கு நம்மால் ஆன பணியைச்செய்ய வேண்டுகிறோம். பள்ளி மாணவர்கள் இந்த விழிப்புணர்வில் கட்டாயம் ஈடுபடவேண்டும். இதற்கு பள்ளிகள் தகவல்கள் தெரிவித்து ஒத்துழைக்க வேண்டும்.

மேலும் **குமரி அறிவியல் பேரவை இளம்விஞ்ஞானிகள் அனைவரும் நாகர்கோவில் ரோட்டரி சங்கத்தின் அருகில் கூடி கையில் மெழுகுவர்த்தி தீபமேந்தி விழிப்புணர்வை ஏற்படுத்த இருக்கிறார்கள். இதற்கான பணியில் ரோட்டரி சங்க மண்டலங்கள் III & IV இணைந்து செய்து வருகின்றன.**

இத்தகைய விழிப்புணர்வு மூலம் குமரிமாவட்டத்திலிருந்து உலகளாவிய விழிப்புணர்வு கொண்டுவர வழிவகுக்கும் என நம்புகிறோம். பத்திரிகைகள் தொலைக்காட்சிகள், தகவல் தொடர்பு சாதனங்கள் வருங்கால சந்ததியினர் நலவாழ்வுக்கு உதவ வேண்டுகிறோம்.

இவன்

முள்ளஞ்சேரி.மு.வேலையன் ,
அமைப்பாளர்,
குமரி அறிவியல் பேரவை,
முளங்குழிஅஞ்சல், குமரிமாவட்டம்.
9942758333.